# THE MORNING STAR

*Registered as a Newspaper.* ( Established 1841 ) Published Every Friday

Vol. 135 JAFFNA, FRIDAY, 7TH NOVEMBER, 1975. No. 44

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

## J. D., C. S. I. Women's Fellowship

The J. D., C. S. I. Women's Fellowship observed October 12th to the 18th as Christian Home Week, when meetings in all the Churches were organised and conducted by Women and Youth. The theme was taken from Joshua 24 : 15 — "But as for me and my house, we will serve the Lord". The week's programme culminated with the Christian Home Festival held on the 1st of October at the Uduvil Church. A large and well represented gathering most of them women met together to parttake in a well planned programme. It was however felt that in keeping with the theme more fathers and children could also have been present. The Service was led by Mrs. R. Ratnam. The Rev. M. A. Ratnarajah, Chairman of the North Ceylon Methodist Church, presented a very inspiring and illustrative sermon on Religion for and in the Home paying special significance to each member of the household including the servants. The service was followed by tea.

## A. L. Union Celebrations

### Chundikuli Girls' College

The Advanced Level Union of Chundikuli Girls' College conducted its Annual Dinner on Wednesday the 29th of October at their School Hall. About 200 students participated at this function of whom thirty represented sister unions of other colleges. Speeches were made by Suganthy Hensman, the President of the Union, Aloma Asirwatham, Dushanthi Snell and Vanithajothy Coomarasamy.

Thiraviyarajah Ratnarajah of St. John's College spoke on behalf of the guests.

### Jaffna College

The Advanced Level Union of Jaffna College, Vaddukoddai held its Annual Dinner on Saturday the first instant with Mr. J. G. Asirwatham, the District Judge, Chavakachcheri as the Chief Guest. The function was presided over by R. Premachandran, the Preident of the Union. Mr. Asirwatham in the course of his speech said that the literary association of a college is a true index of the standard and self discipline of the students of the college. Students who held important positions in literary associations are today holding important position in the State. He also said that the young people have an alert mind and are able to distinguish between the just and unjust much more quickly than the adults.

The Principal, Mr. A. R. Kadirgamar representing the College and Lingeswary Chellappah, V. Selvaratnam representing the Academy, also spoke at the Dinner.

## Youth Rally at Women's Centre

The Youth Federation of the JDCSI held a Rally at Womens Centre on Saturday the 25th of October. It was presided over by the Rev. N. W. G. Sugunarajah, Director of the R. E. B. The main address of the day was given by Mr. S. Jebanesan of the Staff. of Jaffna College. He spoke on the Role of the Christian Youth in the advancement of the Society." An interesting discussion followed at which the adult members of the R. E. B. and students participated. In the afternoon, the youth debated whether the employment of women affect the progress of their families. Twenty-two students spoke at this debate.

About Ninety students from the youth leagues of the various churches of the JDCSI attended the Rally. At the end of the meeting, Mr. A. Jeyakumaran, Youth Assistant of the R. E. B.' thanked the speakers and the participents for their presence and support.

## Wider Horizons for our Teachers

Miss V. Arulanantham, B. Sc. (Ceylon) of the Staff of Uduvil Girls' College has returned to her school after a Post-Graduate Certificate in Education at Southlands College of Education, Wimbledon, London, specialising in Religious Education. Her curriculum option was curriculum planning and development and her foundation option was child psychology. As she was the recipient of a WCC Scholarship, she had the opportunity of visiting many churches and attending conferences and seminars during the vacation.

Miss C. Y. Sellaiah, Vice-Principal of Uduvil Girls' College left early in September, having gained admission to the University of Oxford for a year's study in its Department of Educational Studies.

We are happy at the increasing opportunities our teachers have, of equipping themselves for the new era of education in Sri Lanka.

## Personal

Mr. Milroy R. Selvarajah, Senior Appraiser and Postal Appraiser, Customs, has been promoted as Assistant Collector of Customs. Mr. Selvarajah is a member of the Executive Committee of the Jaffna Diocese of the C. S. I.

## The Ceylon Home Bible League

A meeting of the above League was held on the 15th of October at the Jaffna Y. M. C. A. The Rev. W. Scott, Director of the World Home League and Mr. Sam Buell, Director of the Ceylon Home League addressed the meeting.

The object of the W. H. B. L. is to make the Bible available in every home and through its auxiliary *Project Philip*, a Bible study programme to strengthen the churches in their outreach.

## OBITUARY

### Mr. K. Sellathurai

Mr. Knight Sellathurai (81), retired Station Master (Malaysia) of Chankanai passed away last week at his residence. He was an active member of the Chankanai Church.

Rev. N. W. G. Sugunarajah officiated at the Funeral Service at his residence, assisted by Rev. N. Kathiravelu and Mr. S. J. Manickam. A tribute to the life and work of the deceased was paid by Rev. N. Kathiravelu.

He leaves behind besides his wife, four sons, Messrs Kirupairajah, Jeyarajah, Selvarajah and Yugarajah and three daughters, Mrs. P. Rajasaratnam, Mrs. P. Alagaratnam and Mrs. P. Nesarajah.

### Mr. T. Abraham Kandiah

We regret to record the death which occurred on Sunday, October 26th of Mr. T. A. Kandiah (79), Retired Head Master, Erlalai North. Mr. Kandiah held a large place in the community at Erlalai where he wae responsible for many community projects. The Church Lane at Erlalai was broadened due to his initiative and hard work. He had a silent code of conduct and was greatly loved and respected in the village. He encouraged the farmers in breaking new ground in their ventures and was one of the pioneers who enthused the farmers to grow Malayalam tobacco for export.

Rev. S. T. Aseervatham officiated at the funeral Service at home and at the graveside, assisted by Rev. Sam Thampoe.

He leaves behind besides his wife, four sons, Messrs. K. G. Subirtharatnasingam, K. J. Selvanayagam, K. J. Kanagasingam and K. J. Balasuntharam and two daughters Mrs. G. R. Vyravanathan and Mrs. V. Anandarajah.

## Sri Lanka Corneas assist California Surgeon

A California Eye Surgeon, Dr. John P. Beale (Jr.) is utilising donor corneas from Sri Lanka to develop an operation eliminating the need for very strong eye glasses for individuals with severe eye ailments. He expects to perform the first surgery before the end of the year. Extreme cases of myopia (near sightedness) and acute cases of hyperopia (far sightedness) could be corr[illegible]ted by the new surgical techni[illegible].

Dr. Beale practises at the San Francisco Eye Institute which is associated with the San Francisco Eye Hospital. Corneas are very difficult to obtain in the U. S., according to the surgeon and to do the operation properly, lots of human eyes are required to practice on. Dr. Beale was receiving one eye every two months from Sri Lanka and if not for this generous supply, it would have taken five years of research before the first operation would be possible.

Dr. Beale is collaborating with Dr. Jose Barraquer of Bogota, Columbia, the best-known eye surgeon in the world, who is himself from a famous family of eye surgeons.

**JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE**

Commencing shortly six-months course in **Electrical Installation.**

Those interested please apply:

DIRECTOR,
Vaddukoddai.

The ashes of **Joseph Parker Manickasingham** will be laid to rest at the Vaddukoddai Cathedral Church burial grounds after a short service there on **Saturday the 15th Nov., 1975** at 4-3C p. m.

The presence of friends and relatives will be greatly appreciated by his children and only surviving sister.

Namely:—

MRS. B. A. MILLS
DR. J. P. MANICKASINGHAM
MRS. R. T. DAVID

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

“நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்”

மலர் 135 ] 7 — 11 — 1975 [ இதழ் 44


## அனைத்துலகச் சபைகள் மன்றத்தின் ஐந்தாம் மாநாடு

இம்மாதம் இருபத்திமூன்றும் நாள் தொடங்கி டிசம்பர் பத்தாம் நாள் வரை, அனைத்துலகச் சபைகள் மன்றத்தின் ஐந்தாம் மாநாடு கென்யா நாட்டின் தலைநகரமாகிய நைரோபியில் நடைபெறவிருக்கின்றது.

இம் மன்றம், ஏழு ஆண்டுகட்கு ஒருமுறை உலகின் வெவ்வேறு பகுதிகளில், மாநாட்டை நடத்திவருகிறது. இம் மன்றத்தின் உறுப்பினர்களாய் உள்ள சபைகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடி, இக்காலத்தின் பிரச்சினைகளை இம்மாநாடுகளில் ஆய்ந்து வந்தனர். ஆகவே, இம்மாநாடுகள் மூலம் அனைத்துலகச் சபைகளின் ஒருமைப்பாடு குறிப்பாக எடுத்துக் காட்டப்படுகிறது எனலாம்.

மன்றத்தின் முதல் மாநாடு அம்ஸ்ரடம் நகரில் 1948 ஆம் ஆண்டில் நடைபெற்றது. சபைகள் அனைத்தும் ஒன்றுபட்டு வாழ்வதின் அவசியம் இம் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. இவன்ஸ்ரன் நகரில் 1954இல் நடைபெற்ற இரண்டாம் மாநாட்டில், திருச்சபைகள் அனைத்தும் தம் வாழ்விலும் ஊழியத்திலும் இணைந்து வளர்வதின் அவசியம் பற்றி வலியுறுத்தப்பட்டது. புதுடில்லியில் 1961-ல் கூடிய மூன்றும் மாநாட்டில், சபைகள் அனைத்தும் ஒன்றுய்க் கூடிச் செயல்படுவது அவசியம் என்ற உண்மை உணர்த்தப்பட்டது. சுவீடனில் உள்ள உப்சலா நகரில் 1968-ல் கூடிய நான்காம் மாநாட்டில், உலகின் தேவைகளையிட்டுத் திருச்சபை அக்கறை கொள்ளல் வேண்டும் என்ற கருத்து நிலைநாட்டப்பட்டது, இம்மாதம் நைரோபியில் கூடும் ஐந்தாம் மாநாட்டில், இயேசு கிறிஸ்துவின் மூலம் நமக்குக் கிடைக்கும் விடுதலையும் அவர் மூலம் ஏற்படும் ஒருமைப்பாட்டையும் நடுவாகக் கொண்டு, தற்காலப் பிரச்சினைகளுக்கு வழிகாண முயற்சி செய்வார்கள்.

நாம் வாழும் உலகு, பலவித பிரச்சினைகளாற் சிதைந்து கிடக்கின்றது. உலகின் மக்கள் பலவகைச் சக்திகளுக்குக் கட்டுப்பட்டுத் தம் உரிமைகளை இழந்து தவிக்கின்றனர் வெவ்வேறு சமயங்களுக்கிடையிலும், பலவித கலாச்சாரங்களின் நடுவிலும், அரசியல் அமைப்பு முறைகள் மத்தியிலும் உள்ள கருத்து வேறுபாடுகளும், வெறுப்பு மனப்பான்மையும் நீங்குவதாகத் தெரியவில்லை.

இச் சூழ்நிலையில், கிறிஸ்து பெருமானில் நமக்குக் கிடைக்கும் விடுதலை பற்றியும், அவர் கொடுக்கும் ஒருமைப்பாட்டைப் பற்றியும், திருச்சபை எவ்விதமாக உலகிற்கு எடுத்துக் காட்டலாம் என்பதை ஆராய்வதே, இம் மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

இயேசு பெருமான் தம் வாழ்நாளில் அறிவித்த நற்செய்தியின் மூலமாகவும், தம் மரணத்திற்குப் பின் அவர் உயிருற்றெழுந்த வியத்தகு நிகழ்ச்சியின் வாயிலாகவும் தூய ஆவியின் இயக்கத்தைப் புரிந்து கொண்டுள்ள அனுபவத்தின வழியாகவும், கடவுளின் பேராற்றல் எத்தகையது என்பதை அறிந்து, அதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருத்தல் தம் கடமையென்பதை கிறிஸ்தவர்கள் உணரத் தொடங்கியிருக்கின்றனர்.

நீண்ட காலமாகக் கோட்பாடுகளையும் திருச்சட்டங்களையும் ஒட்டிப் பல பிரிவுகளாக வாழ்ந்து வந்த கிறிஸ்தவர்களும், போர்களாலும் சமுதாய அநீதிச் செயல்களாலும் பிரிவினைகளுக்குட்பட நேர்ந்த கிறிஸ்தவர்களும், இப்பொழுது ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவும், மன்னித்து ஏற்றுக்கொள்ளவும் கற்றுக்கொண்டனர்.

அன்பு நெறி நின்று அனைத்து மாந்தர்க்கும் பணியாற்றக் கடவுள் தங்களைப் பணித்துள்ளார் என்றும், இப்பெரும் பணியில் தாங்கள் யாவரும் பொறுப்புடன் பங்கேற்றிருக்கின்றனர் என்றும் உணர்ந்திருக்கின்றனர்.

இந்த அனுபவத்தை மேலும் பல சபைகளும் கிறிஸ்தவர்களும் பெற்றிட இம் மன்றத்தின் ஐந்தாவது மாநாடு ஒரு வாய்ப்பினை வழங்கும் என்பதே எம் நம்பிக்கை.

இம்மாநாட்டில் சபைப் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்பவர்கள், திரும்பி வந்து தத்தம் சபைகளில் மாநாட்டின் செய்தியைச் சாதாரண சபையார் புரிந்து கொள்ளத்தக்க முறையில் விளக்க வேண்டும். இயேசு கிறிஸ்து எந்தெந்தத் தடுப்புச் சுவர்களைத் தகர்த்தெறிகிறார் என்பதையும், யார்யாரை நம்முடைய அயலாராகக் காட்டுகிறார் என்பதையும் தெளிவாக உணர்த்த வேண்டும். இதனை இப்பிரதிநிதிகள் செய்யாவிடின், இத்தகைய மாநாடுகளால் சபையார் எவ்வித பலனையும் அடையமாட்டார்கள். நம் சபையார் தெளிந்த அறிவுடன், விடுதலை பெற்றவர்களாகத் திருச்சபையின் ஒருமைப்பாட்டுக்காக இந்நாட்டில் பணியாற்ற உதவுவதே நம் தலையாய கடமையென்பதையே இங்கு வலியுறுத்த விரும்புகிறோம்.

## ஞானஸ்நானம்


(வண. எம் ஏ இரத்தினராஜா, B. A., B. D.)


(முற்றொடர்)

### III. முழுக்கு ஞானஸ்நானம்

திருச்சபையின் வழக்கிலே ஞானஸ்நானம் அளிக்கும் முறை பலவகைப்பட்டதாயிருப்பதை நாம் காணலாம். தெளித்தல், ஊற்றுதல், முழுக்கி எடுத்தல் என்னும் வெவ்வேறு முறைகள் கையாளப்பட்டு வருகின்றன தேவைக்கும் வசதிக்கும் ஒழுங்குக்கும் தக்கதாக வெவ்வேறு சபைகளிலே வெவ்வேறு முறைகள் அநுஷ்டிக்கப்படுகின்றன. இம் முறைகளுள் எது சரியானது என்ற கேள்வி ஆதிச் சபையிலே என்றுமே எழுப்பப்பட்டதில்லை. ஞானஸ்நானம் திருச்சபையின் அங்கத்துவத்துக்கும் ஐக்கியத்துக்குமுரிய ஓர் அடையாளமே என்ற வகையில், அதனைக் காட்டுமுகமாக வசதிக்கேற்ற முறைகள் ஆதிச் சபையிலே அநுஷ்டிக்கப்பட்டன. குழந்தைகட்கும் வளர்ந்தோருக்கும் ஞானஸ்நானம் அளிக்கப்பட்டதால் தேவைக்கும் வசதிக்கும் ஏற்றதாகவே ஞானஸ்நானம் முறை அமைந்திருந்தது எனத் திருச்சபைச் சரிதம் காட்டுகிறது. இம் மூன்று முறைகளிலே எதையாவது கையாள ஆதிச் சபை இடமளித்திருந்தது.

ஞானஸ்நானம் கொடுக்கும் முறைமை எவ்வாறிருக்க வேண்டுமென வேதத்தில் எங்குமே கூறப்படவில்லை. ஞானஸ்நானம் கொடுக்கும்போது. எந்த முறைமையைக் கையாள வேண்டுமெனவும் வேதத்திற் கூறப்படவில்லை. “பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே” ஞானஸ்நானம் கொடுங்கள் என மட்டும் ஞானஸ்நான சூத்திரம் (Formula) கொடுக்கப்பட்டிருக்கிறதேயன்றி, இன்ன முறைமையிலே (Mode) அது கொடுக்கப்படவேண்டுமெனக் குறிப்பிடப்படவில்லை. ஆகையினுலே ஆதிச் சபையிலே, ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டபோதெல்லாம் “பிதா குமாரன், பரிசுத்த ஆவி” என்ற சூத்திரம் முறையாக அநுஷ்டிக்கப்பட்டதேயன்றி, இன்ன முறைமையிலே மட்டுமே கொடுக்கப்படவேண்டுமென்ற நிபந்தனை இருந்ததில்லை. ஆகவே, “பிதா குமாரன், பரிசுத்த ஆவியின்” நாமத்திலே தெளித்தல், ஊற்றுதல், முழுக்கி எடுத்தல் போன்ற முறைகளும் வசதிக்கேற்ப உபயோகிக்கப்பட்டன என நாமறிகிறோம். ஆதிச் சபையின் முழுச் சரித்திரத்தையும் வழக்க முறைகளையுமிட்டு புதிய ஏற்பாட்டில நாம் முற்றுகப் படிப்பதில்லை. புதிய ஏற்பாட்டு நூல்கள் எழுதப்பட முன்பே திருச்சபை இருந்தது என்பதையும் அச்சபை அங்கீகரித்த அநேக கொள்கைகளும், நிர்வாக முறைகளும், சபை ஒழுங்குகளும் நடைமுறையில் இருந்தன என்பதையும் நாம் அறியலாம். ஆதிச்சபையின் சில வரலாறுகளும், நடைமுறைக் காரியங்களும் புதிய ஏற்பாட்டு நூல்களில், விசேஷமாக அப்போஸ்தலர் நடபடிகளிற் கூறப்பட்டிருக்கின்றன. ஆனல் இந்நூல்களிற் கூறப்படாத, அநேக வரலாறுகளும் நடைமுறைகளும் ஆதிச் சபையால் அங்கீகரிக்கப்பட்டு அன்று வழக்கத்திலிருந்தன என்பது சரித்திர உண்மை இவ்வரலாறுகளும், வழிபாட்டு முறைகளும், அங்கீகரிக்கப்பட்ட பழக்க வழக்கங்களும் புதிய ஏற்பாட்டுக்கு முன்னர் எழுந்த நூல்களிலும் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் எழுந்த நூல்களிலும், அதற்குப் பின்னர் எழுந்த நூல்களிலும் விளக்கமாகக் கூறப்பட்டிருப்பதை நாம் காண முடியும். ஆதிச் சபையின் சரித்திரம் அப்போஸ்தலர் நடபடிகள் கூறும் சரித்திரம் மட்டுமல்ல. பெந்தகொஸ்தே நாளோடு திருச்சபை ஆரம்பமானது என்போமாயின் அச்சம்பவத்தைக் கூறும் அப்போஸ்தலர் நடபடிகள் அநேக ஆண்டுகளுக்குப் பின்னரே எழுதப்பட்டது. அந்த இடைக்காலத்திலே திருச்சபை உற்பத்தியாகி, வளர்ந்து, பரவி, ஒரு ஸ்தாபனமாக அமையவும் தொடங்கிவிட்டது இவ்விடைக்காலத்திலும் அதற்குப் பின்னரும் திருச்சபையின் வரலாற்றையும் வழக்க முறைகளையுமிட்டுக் கூற எழுந்த நூல்கள் வேறுபல உள. எனவே, அன்றைய ஆதிச்சபையின் விசுவாசம், வளர்ச்சி ஊழியம், நடைமுறைகள் என்பவற்றை முறையாகச் சரித்திர அடிப்படையிலே அறிய விரும்பும் எவரும் அப்போஸ்தலர் நடபடிகளோடு கூட இச் சரித்திரம் வரலாற்று நூல்களையும் கவனித்துப் படிக்க வேண்டியது அவசியம். அதனைச் செய்யாவிடில், ஆதிச் சபையின் வரலாற்றை முறையாக அறியாதவர்களாவோம். இவ்வகையில் கிறிஸ்தவ விசுவாசத்துக்கு திருச்சபைச் சரித்திர வரலாற்று நூல்கள் இன்றியமையாதவை என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். புதிய ஏற்பாட்டை மாத்திரம் வைத்துக்கொண்டு நாம் ஆதிச் சபையின் சம்பவங்களையெல்லாம் அறியமுடியாது. அவ்வாறு முனைவதும் புதிய ஏற்பாட்டிலே கூறப்படாததால் ஆதிச் சபையிலே ஒரு குறிக்கப்பட்ட வழக்கம் இருக்கவில்லை எனக் கூறுவதும் வீண் குதர்க்கமாகும்.

நாம் ஏற்கனவே கண்டது போல, ஞானஸ்நான முறைமை (Mode) எதுவும் புதிய ஏற்பாட்டிலே திட்டமாகக் கூறப்படவில்லை. ஆனல், ஆதிச் சபையிலே ஞானஸ்நான வழக்கம் இருந்தது என்பது உண்மை. அன்று அங்கீகரிக்கப்பட்ட முறைமை எது என்பதை ஆதிச் சபைச் சரித்திரத்தைக் கூறும் வேறு நூல்களிலிருந்து நாம் காணக் கூடியவர்களாயிருக்கிறோம். அவற்றிலிருந்து, தெளித்தல், ஊற்றுதல், முழுக்கி எடுத்தல் என்னும் முறைமைகள் யாவுமே திருச்சபையின் அங்கீகாரத்தைப் பெற்றவை என்பதை நாம் காணமுடியும். அப்போஸ்தலர் காலத்திலேயே எழுதப்பட்ட “கற்பனைகள்” (The Didache) என்னும் நூலிலே அக்கால ஞானஸ்நான முறைமை பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது


(தொடர்ச்சி 3-ம் பக்கம்)


### உங்களுக்குத் தெரியுமா?

#### நீரின் இழுவிசை

நீரின் மீது எண்ணெய் ஊற்றினல், அது நீரின் இழுவிசையைக் குறைக்கிறது. புயலடிக்கும்போது அலைகளைத் தாழ்ந்துபோகச் செய்யக் கப்பலிலிருந்து எண்ணெயைக் கடலில் ஊற்றுவார்கள்! அப்படிச் செய்யும்போது, நீர் பெரிதும் அடங்கி அமைதியாகிறது. மேலும், நீரின்மீது எண்ணெயை ஊற்றி, நீருக்குள் அமிழ்ந்துபோக இருந்த பல கப்பல்கள், உதவி கிடைக்கும் வரை அமிழ்ந்து விடாமல் நீரில் மிதந்து கொண்டிருக்கச் செய்யப்பட்டிருக்கின்றன!

#### விழிப்பு!

மனிதர்கள் சுமார் 90 மணி நேரம் வரைதான் விழித்துக் கொண்டிருக்க முடியும்! அதற்கு மேல் விழித்துக்கொண்டிருக்க முடியாது!

மதிப்புரை

## திருவாட்டி கிறேஸ் போல் அம்மையார்

அனைத்துலக மகளிர் ஆண்டாகிய இவ்வாண்டில், நம் நாட்டில் கிறிஸ்தவ பெண்களுக்குச் சிறந்த இடம் வகுத்துத் தந்த திருவாட்டி கிறேஸ் போல் அம்மையார் இறைவனின் திருவடிகளையடைந்தார். இவரின் மறைவு, பொதுவாக இலங்கைத் திருச்சபைக்கும், சிறப்பாகக் கிறிஸ்தவ தமிழ்ச் சமுதாயத்திற்கும் பேரிழப்பாகும். தலைசிறந்த தொண்டர் ஒருவரை இழந்து நிற்கின்றோம்;

போல் அம்மையாரின் வாழ்வையும் சேவை நலன்களையும் ஆராயும்போது, அவர்கள் சமுதாயத்தின் நலனுக்காக ஆற்றிய பெருந்தொண்டுகளும், சமயத் துறையிற் புரிந்த பல சிறந்த பணிகளும் நம்முன் தோன்றுகின்றன. உடுவில், கண்டி, கொழும்பு ஆகிய இடங்களில், ஆசிரியராகவும், கல்லூரி அதிபராகவும் சிறந்த பணிபுரிந்து வந்தார். பல மகளிர் மன்றங்களிற் கலந்து, பெண்களின் நலனுக்காக அயராது உழைத்தார். சமுதாய நலனுக்காகத் தாம் புரியும் பணிகள், இறைவனுக்கே செய்யப்படுகின்றதென்னும் உயரிய நோக்குடன் சலியாது பணியாற்றினார்.

அம்மையாரின் சீரிய கொள்கையும், நேரிய சிந்தையும், இளகிய நெஞ்சும், அவவிய நட்பும், சிறந்த செயலும் பொருந்திய உருவாய், மருட்சியில் பேச்சும், புரட்சிசால் எழுத்தும் பூண்டு, சுயநலமற்ற பிறர் நலங் கருதும் பெரும் பணிகளை, யாவரும் விரும்ப ஓவாதியற்றி ஒளி வீசினார் என்பது மிகையாகாது.

கொழும்புச் சபையில் கடந்த ஏழு ஆண்டுகள் போதகராகக் கடமையாற்றியபோது, அம்மையாருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. கொழும்புச் சபையின் திருப்பணிகளுக்கு இவர் அளித்து வந்த ஆக்கமும், ஊக்கமும் இச்சபையின் வரலாற்றிலேயே சிறந்த இடமெடுக்கும். இச்சபையின் நலனுக்காகத் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திப் பணியாற்றினார். தம் வாழ்நாளிற் பெரும் பகுதியைத் திருச்சபை வாழ்விற் குரிமைப்படுத்தி, மாசில்லாத் தொண்டை மகிழ்வோடு செய்தார் என்றே நாம் கூறலாம்.

இவர், சபை ஆராதனைகளிலும் வானொலி மூலமும் ஆற்றிய அருளுரைகளிலும், பல வார, மாத இதழ்களில் தீட்டிய கட்டுரைகளிலும், இவரின் பரந்த நோக்கும் பலதுறையறிவும் மிளிர்ந்தன. கிறிஸ்தவ சித்தாந்தத்தில் தனிப்பற்றும் பயிற்சியும் உடையவர். இறைவழிபாட்டில் பாடல்கள் பாவிக்கும் முறைமையில் சிறந்த அறிவு படைத்தவர். மேல்நாட்டு இசைப்பாடல்களில் வல்லுநர். அதேசமயத்தில், கீழ்நாட்டு இசையைத் தான் சுவைப்பதுடன், மற்றவர்களும் இதன் மேன்மையை அறிய வேண்டுமென்ற விருப்புடையவர்;

சபையில் மட்டுமின்றி, தேசிய கிறிஸ்தவசபை, பல்வேறு சமயக் கல்விக் குழுக்கள், கிறிஸ்தவ வாலிபப் பெண்கள் இயக்கம், கிறிஸ்தவ இலக்கிய சங்கம் முதலிய இயக்கங்களில் ஈடுபட்டு இறுதிமட்டும் சிறந்த தொண்டு புரிந்து வந்தார். தாமும் கற்றுப் பிறர்க்கும் கற்பித்து "தாமின்புறுவ துலகின்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" என்னும் பொய்யா மொழிக்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கினார்,

அம்மையார் ஆங்கில மொழியிற் சிறந்த பாண்டித்தியம் அடைந்திருந்தபோதிலும், தமது தாய்மொழியாகிய தமிழில் அதிகப் பற்றுடையவராயிருந்தார். இவர்தம் ஆங்கிலப் பயிற்சி, இவருக்கிருந்த தமிழ்ப் பற்றையும் நாட்டுப்பற்றையும் வளர்க்கப் பயன்பட்டதேயன்றி, அவற்றைச் சற்றேனும் குறையச் செய்யவில்லை.

இவர், சிறந்த பண்பும் நிறைந்த கல்வியும், அன்பும் நட்பும் ஆற்றலும் சான்ற தலைசிறந்த சமயத் தொண்டர். தன்னலமின்றி ஓய்வு என்பதே அறியாது அல்லும் பகலும் பிறர் நலனுக்காகச் சலியாது தொண்டாற்றி வந்தார். உண்மையும் நேர்மையும் கொண்ட உலையா முயற்சியாளர்; அடக்கமும் இன்சொல்லும் இவருக்கு அணிகளாக விளங்கின. பழகுதற்கு இனிய பண்பினர். தணியா இறையன்புடையவர். தனக்குச் சரியெனப் பட்டதை யாரிடத்திலும் அஞ்சாது எடுத்துரைக்கும் திண்மையுடைய பண்பாளர்.

இவருடைய தொண்டுள்ளம் இன்றுள்ளவர்களையும், திருசபையின் வருங்காலச் சந்ததியினரையும் ஊக்கப்படுத்திக்கொண்டேயிருக்கும். அம்மையார் அவர்கள் நம்மிடம் விட்டுப்போன உன்னத இலட்சியங்களையும், உயர்ந்த நெறிகளையும், உயரிய கோட்பாடுகளையும் பாரட்டுவதோடு, அவரில் ஒளிர்ந்த இச்சிறப்பியல்புகளுக்காகவும், இறுதி வரை இவர் வாழ்வில் மங்காது மிளிர்ந்த விசுவாச ஒளிக்காகவும் இறைவனுக்கு எமது நன்றியைச் செலுத்துவோமாக.

இவர்தம் ஆன்மா இறைவனடியில் இன்புறுவதாக.

'என் வார்த்தை கடைப்பிடித்
தோர் மரணமதை ருசிப்பதில்லை'
என்று இயேசு உரைத்த உண்மை
அம்மையார் பிரிவில்பொய்த்திடுமோ,
தன்னைப்போல் பிறனையுமே
நேசித்து ஆதரித்தோர்,
என்றுமிறை சமுகத்தில் பிழைத்
திருப்பாரிது நிச்சயமே.

[காலஞ்சென்ற கிறேஸ் போல் அம்மையாரை நினைவுகூரும் முகமாகக் கடந்த மாதம் 25-ந் திகதி கொழும்பில் நடத்தப்பட்ட நன்றி செலுத்தும் ஆராதனையில், அருட்திரு. டி. ஆர். அம்பலவாணரால் நிகழ்த்தப்பட்ட இரங்கலுரையின் சுருக்கம்.]

---

## ஞானஸ்நானம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஞானஸ்நானம் எப்போதுமே பிதா குமாரன, பரிசுத்த ஆவியின் நாமத்திலே அளிக்கப்படவேண்டும்; ஓடும குளிர்ந்த தண்ணீரிலே ஞானஸ்நானம கொடுக்கலாம்; அது வசதியின்றேல் சூடான நீரிலே கொடுக்கலாம்; முழுக்கிக் கொடுக்கலாம்; இல்லையேல் தலையிலே தண்ணீரை மூன்று முறை தெழித்தோ ஊற்றியோ கொடுக்கலாம்."

இக் குறிப்பு ஆதிச் சபையின் ஞானஸ்நான முறைமையை விளக்குவது மட்டுமன்றி, தெளித்தல், ஊற்றல், முழுக்கி எடுத்தல என்னும் முறைமைகளுள் எதையும் கையாளத் திருச்சபை இடம் அளித்திருந்தது என்பனதயும் தெளிவாகக் காட்டுகிறது. எது சரியான ஞானஸ்நான முறைமை என்ற கேள்வி ஆதிச் சபையிலே எழுந்ததேயில்லை.

(தொடரும்)

செய்திகள்

## அனைத்துலகச் சபைகள் மன்றம்.

அனைத்துலகச் சபைகள் மன்றத்தின் ஐந்தாம் மாநாடு, இம் மாதம் 23-ஆம் நாள் தொடங்கி டிசம்பர் மாதம் 10-ஆம் நாள் வரை, கென்யா நாட்டின் தலைநகரமாகிய நைரோபியில் நடைபெறும். இம்மாநாட்டில் சிந்திக்கப்படும் முக்கிய பொருள்; 'இயேசு கிறிஸ்து விடுதலையளிக்கிறார், ஒன்றுபடுத்துகிறார்" என்பதே.

இம்மாநாட்டில் 2300 பேர் கலந்து கொள்வார்கள். இவர்களுள் 747 பேர் 271 சபைகளிலிருந்து பிரதிநிதிகளாக அனுப்பப்படுகின்றனர். இப்பிரதிநிதிகள் ஏறக்குறைய நூறு நாடுகளிலிருந்து போவார்கள். இப்பேரவையிற் கலந்துகொள்வோரில் 20 சதவீதம் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலிருந்து இம்மாநாட்டிற்குப் பதின்மூன்று பேர் செல்கின்றனர் டாக்டர் டபிள்யு. ஜி. விக்கிரமசிங்க (பப்திஸ்த சபை), அருட்திரு. கெனத் பெர்ணந்தோ (அங்கிலிக்கன் சபை), திரு. ஏன்ஸ்லி சமரஜீவ (மெதடிஸ்த சபை), செல்வி. ருத் மேன் (தென் இந்திய திருச்சபை, யாழ் திருவட்டம்), செல்வி. கிளாடிஸ் கல்லிஸ் (இரட்சணிய சேனை) திருமதி சித்திரா பெர்ணந்தோ (அங்கிலிக்கன் சபை-மளிர் பிரதிநிதி), டாக்டர் மெஸ் ஜீரவதினம் (N. C. C. வாலிபர் பிரதிநிதி), திரு. மனோசிங்கம் (வாலிபர் பிரதிநிதி), செல்வி. சிராணி சுகுணராசா (அமைப்புதவியாளர்), திரு. டெரல் பத்தலமேஸ் (அமைப்புதவியாளர்), திரு. ஜெ. கே. வோல்டர் சில்வா (அமைப்புதவியாளர்,, டாக்டர் லின் டி சில்வா (ஆலோசனையாளர்), அருட்திரு எஸ். வி. அரியராசா (ஆலோசனையாளர்); பௌத்த சமய அவதானியாக பேராசிரியர் எல் ஜி. ஹேவாகே அவர்களும் செல்கின்றனர்.

## உடுவிலில் சிறப்புக் கூட்டங்கள்!

### இசை விழா

கடந்த மாதம் 30-ம் திகதி உடுவில் மகளிர் கல்லூரியிலும் 31-ம் திகதி உடுவில் சபையிலும், இலங்கை இறையியற் கல்லூரி தமிழ்க் கலாமன்றக் குழுவினரால் இசை விழா சிறப்பாக நடத்தப்பட்டது. இவர்கள் நிகழ்த்திய மெல்லிசை. வில்லிசை நிகழ்ச்சிகளில் சபையாரும் பிள்ளைகளும் திரண்டு வந்து மகிழ்வுடன் கலந்து கொண்டனர்.

### சகல பரிசுத்தவான்களின் திருநாள்

இம் மாதம் 1-ம் திகதி காலை 9-30 மணி தொடக்கம் பிற்பகல் 1-00 மணிவரை, இத் திருநாளை அனுஷ்டிக்குமுகமாக, மருதனுமடம் பெண்கள் நிலையத்தில திடப்படுத்தல் பெறும் வாலிபர்களுக்கு ஞான ஒடுக்கம் நடத்தப்பட்டது.

அன்று மாலை 5-30 மணிக்கு உடுவில் ஆலயத்தில் மரித்தவர்களை நினைவுகூர்ந்து நன்றி செலுத்தும் ஆராதனை போதகரால் நடத்தப்பட்டது

### திடப்படுத்தல் ஆராதனை

உடுவில் சபையின் திடப்படுத்தல் ஆராதனை இம் மாதம் 2-ம் திகதி காலை பேராயர் அருட்பெருந்திரு. டி ஜே அம்பலவாணர் அவர்களால் நடத்தப்பட்டது. பதினொரு பிள்ளைகள் திடப்படுத்தல் பெற்றனர்.

## சுதந்திரமா?

சிறுவருக்குப் பரிபூரண சுதந்திரம் கொடுத்தால்தான், அவர்கள் நன்கு வளரக்கூடும் என்று எல்லாவிடங்களிலும் வலியுறுத்திப் பேசிவந்தார், ஒரு மனோதத்துவ ஆசிரியர்.

ஒரு நாள் பின்வரும் சம்பவம் இவ்வாசிரியர் வீட்டில் நடைபெற்றது. இச்சம்பவத்தின் பின் அவரது முன் நிலைமை மாறிவிட்டது!

நடந்த சம்பவம் இதுதான்: இவ்வாசிரியரின் சின்னஞ்சிறு மகன் உணவு பரிமாறும் சமயம் அதிகமாய் அழ ஆரம்பித்தான். காரணம் என்னவெனக் கேட்டார். அவன் தோட்டத்திறகுள் பளபளவென்று மினுங்கிய ஒரு புழுவைக் கண்டேன், அதை நான் சாப்பிடவேணும், கொண்டு வாருங்கள் என்று அழுது கொண்டே கூறினான். தகப்பன் தோட்டத்திற்குச் சென்று, ஒரு புழுவை யெடுத்துக் கொண்டு வநது, அதைச் சுத்தம் செய்து அவன் சாப்பிடும் 'பிளேட்'டில் வைததார். மகனுடைய அழுகையோ ஓயவில்லை. 'எனக்கு இதை நெய்யில் பொரித்துக் கொண்டு வாருங்கள்' என்றான். உடனே தகப்பன் அதற்கும் இணங்கி வேண்டிய ஒழுங்கு செய்தார் அதற்குப் பின்னும் மகனின் அழுகை நிற்கவில்லை. ஏன்? என்று கேட்டதற்கு, 'பொரித்த அப்புழுவில் பாதியை அப்பா சாப்பிடவேண்டும்' என ஒரே பிடிவாதமாய் நின்றான் மகன். தகப்பன் மகனைத் திருப்திப் படுத்துவதற்காக பல்லைக் கடித்துகொண்டு மூக்கைப் பிடித்துக் கொண்டு அப்புழுவின் பாதியை விழுங்கினார். மகனோ, இன்னும் சத்தமாய் அழுதான். ஏன்? என விசாரித்த போது, 'நான் தின்ன வேண்டுமென்று ஆசைப்பட்ட பாகத்தை அப்பா தின்றுவிட்டார். அநதப் பகுதிதான் எனக்கு வேண்டும்." எனப் பிடிவாதமாய் அழுதான்.

தகப்பன் திணறிப் போய் விட்டார்.

மரணம்

## திரு. தர்மர் கந்தையா

ஏழாலை வடக்குச் சபையைச் சேர்ந்த திரு. T. கந்தையா அவர்கள் அக்டோபர் மாதம் 17-ம் திகதி காலமானார். இவர் யாழ். திருமாவட்டத்தின் கீழ் முன்னர் இயங்கிய பல பாடசாலைகளில் ஆசிரியராகவும தலைமையாசிரியராகவும் கடமையாற்றினார். அளவெட்டி அ. மி. பாடசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறினார். ஏழாலை வடக்குச் சபைக்கு இவர் சிறந்த தொண்டாற்றி வந்தார். தம் குடும்பத்தினரும் சபை வாழ்வில் முழுவதுமாக ஈடுபடவேண்டுமென்ற வாஞ்சையுடன் தம் பிள்ளைகளை அவ்வழியில் வளர்த்து வந்தார் இவரின மறைவு ஏழாலை வடக்குச் சபைக்குப் பேரிழப்பாகும்.

இவரின் பிரேதசேம ஆராதனை இவரது இல்லத்திலும், சேமக்காலையிலும் அருட்திரு. S. T. ஆசீர்வாதம் அவர்களால், அருட்திருவாளர்கள் சாம் தம்பு, N. கதிரவேலு ஆகியோரின உதவியுடன் நடத்தப்பட்டது.

---

இதன் பின் ஆலய முன்றலில் நடைபெற்ற ஐக்கிய விருந்தில் சபையார் அனைவரும் கலந்து கொண்டனர்.

The Morning Star

7th November, 1975

## Parents' concern over Unequal Access to University Education

For five successive years the Government has followed a policy of racial discrimination in the matter of University Admissions. Five years ago, a Jaffna Town Hall Conference held on Human Rights Day (10th December, 1970) expressed its deep concern to the Prime Minister at the new scheme of admissions, which required of Tamil entrants to the Science and Science-based faculties a higher minimum aggregate than of their Sinhalese and Muslim counterparts. The present formula, miscalled 'standardisation', in effect requires different minima in different subjects for the two ethnic groups; if anything, the discrimination against Tamils has assumed graver proportions. All these five years the voice of protest has been raised by aggrieved parents and the public, but has gone unheeded. And incomprehensible to them has been the unusual procedure, and publicity given to it, this year, — the Sectoral Committee consisting of Minister Pieter Keuneman and a group of Ministers recommending on 1st October that language-wise 'standardisation' in processing marks for admission be discarded from 1975 (retaining 30% District Quotas just for a few years) and the Board of Ministers reversing that recommendation the following week! We seem to be back again almost where we were, so far as Tamil candidates are concerned!

And very incomprehensible to the public why language-wise 'standardisation' of marks was ever thought of when the Commissioner of Examinations has reported that the manipulation of marks by the marking examiners is "neither possible nor probable"; if this is accepted, there is no justification for media-wise 'standardisation'. Especially in the Science subjects, where 50% of the marks are for Multiple Choice Questions and 30% for structured questions. And, if all is fair, why refuse re-scrutiny of scripts?

"Higher education shall be equally accessible to all on the basis of merit", is a right enshrined in the Universal Declaration of Human Rights. A UN Report notes: "Any discriminatory practices in this field imply a refusal to recognise equality before the law."

The District Quota System: The Keuneman Report considers this a "wide departure from the cardinal principle of selection on merit". And that it conferred only marginal benefits and sometimes none at all on the educationally underprivileged districts. The main beneficiaries from the scheme, the Report points out, have been "students from more affluent families who had their primary education in relatively less developed districts but their secondary education is developed districts". On the social repercussions of the DQS, the Report quotes a Committee of Officials as saying how "in schools like Ananda, Royal and Visaka, two sets of students in the same class who sit the same examination after having followed the same course for a period of two years or more find to their dismay that one group of students who obtained lower marks secure admissions to the University, while the other with a higher aggregate of marks does not get selected"; it goes on to speak of the latter group's bewilderment and bitterness and the resulting "brain drain", where the parents are professionally qualified and can emigrate with their families. Keuneman could have with equal or greater force spoken of the anguish of Tamil students and the relatively larger "brain drain" of Tamil families. If we thought about it, in the world of today, with so many bright prospects everywhere, and the new concept of life-long education, no one will agree to become a second class human, with less equality and less dignity than his fellows, and less chance of self-fulfilment, grounded in his native land.

There are no doubt regional imbalancee in educational provision, due to neglect of various kinds in the past. Let us however not deceive ourselves. Everywhere in Lanka, are not social differences more pervasive than geographical or ethnic? May be, under the DQS, the under-privileged will become still more so. Adding to the social inequalities in the country, denying that we are one nation and a democracy, the proposed area-quota system may well turn out to be a further divisive force. The true answers may have to be found even beyond the provision of good A. L. classes; in the general schooling provision, in out-of-school education, in the integration of these with the region's socio-economic planning, and in the stimulus of an over-all intellectual system with a regional campus as nucleus.

Nor can a young nation, with a long way to go on the road to national unity and identity and all sided development, afford to lose its way on the by-path of racial discrimination, in higher education of all things. The University it is that can serve as "the common intellectual estate" binding the generations and the nation together. In an age of global history, it is the University community functioning as part of the international community of learning, in its reach of studies and wide research programmes, anticipate the emerging world community. In this great task it has to function against the insistent demand everywhere for enhancing human capability. Let not Sri Lanka's leaders betray this obligation to the nation and humanity.

*(Text of Memorandum — slightly abridged — sent to the Prime Minister by the Parents Association of Jaffna on 24th October, 1975.)*

*Tellippalai Church — Women's Fellowship*

## CHRISTIAN PRINCIPLES OF FAMILY LIVING — I

*(Text of an address delivered by Dr. (Mrs.) Joy Canagarajah)*

Today I wish to share with you the "Christian Principles of Family Living." It is something that all of us are aware of; having read about it in books and having experienced it ourselves. Forgive me for quoting from the context but I wish to do so because it is most forcibly and vividly put therein.

One reason for the gradual decline of the distinctively Christian home is that Christian parents are not fulfilling their responsibilities. One mother told her minister, "Pastor, I want you to know that every time the doors of this Church are opened, my children will be here." The pastor of course, was impressed with this remark until he realised the true significance of it.

Like this mother, many parents take their children to the doors of some evangelical church, deposit them there and say, "Here, you lead my children to Christ, you teach them the Word of God." These parents by so doing feel that they have shed a responsibility that God has placed at their doorstep. Parents must remember, that the Church is not, and can never become, a substitute for Christian parents.

In *Deuteronomy 6: 4-9*, Moses listed two basic responsibilities of Christian parents. "Hear, O Israel: The Lord our God is one Lord; and thou shalt love the Lord thy God with all thine heart, and with all thy soul and with all thy might but these words which I command thee this day, shall be in thine heart; and thou shalt teach them deligently unto thy children." Parents were prevailed upon to teach the Word of God to their children in their homes and the emphasis is laid on Obedience to the Word of God.

The historical background of this incident is important. The children of Israel travelled through the wilderness, the Israelites disobeyed God and refused to enter the Promised Land. Hence an entire generation perished in the wilderness. In the Book of Deuteronomy, Moses was grooming a new generation for entrance into the Promised Land. He stressed the importance of Obedience to God throughout the book. In Deut. 6: 4-9, he pointed out how important the home was in teaching God's people obedience. Parents like Moses should continue to groom our children (the next generation) to enter into God's Love and Confidence (comparable to the Promised Land).

In this passage Moses gave two basic responsibilities of Christian parents. The first is to allow God to apply His truth, as revealed in His Word, to their (the parents') lives. Deut. 6 Vs 4; "Hear, O Israel, the Lord our God is one Lord." Doctrine is dynamic, thus it requires a response. The response which God required was Love (Vs 5). Love is a response of the whole human personality — the mind, the will and the emotions. The opposite of ignorance in the spiritual realm is not knowledge but *Obedience* — Obedience to God. We are to obey God's command for complete love and devotion.

The Word of God was to hold such a prominent position in every person's life that it would produce a proper relationship between him and his God. In this passage Moses was speaking primarily to Parents: "Parents, if you do not have a dynamic relationship with the living Lord, then you have nothing to communicate to your children."

Once a woman approached a preacher and asked him this question: "What can you tell me that would help me make my children learn to be more patient?" If a parent wants his children to be more patient, he should ask God to make him a more patient person. So it is with every good quality that man possesses. Parents must remember that they cannot impart what they do not possess. Parents should grow in the grace and in the knowledge of the Lord and should allow God to form more of Jesus Christ in his life. The reality of such a relationship will provide something worthwhile to communicate to their children. The answer then is a personal relationship with Jesus Christ. Then Christ moves into his experience and transforms him and makes him iike Himself.

The second basic responsibility of parents is to make *God's truth central in their homes.* If God's truth is central as the parent's lives, it will also be central in their homes. A man may wear a so-called mask in public but he can't fool his wife or children about his relationship with God.

Moses listed two ways in which Christian parents are to communicate truth to their children. The first means is '*teaching*' and the second is '*talking*' *Deut. 6:7* "And thou shalt teach them [these words that are upon your heart] diligently into your children." This is formal, planned and structured instruction. Many Christian parents have attended church services and Bible classes for many years yet they find it difficult to explain biblical truth to their children. Parents should avail themselves of every opportunity to learn God's Word in order to teach their children God's truth.

*(To be continued)*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna, on Friday, 7th November, 1975.